மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
|---|
| 09 |

ஆண்டிறுதிப் பரீட்சை – 2023
பாடம்:- தமிழ் மொழியும் இலக்கியமும் - I, II

பாடசாலையின் பெயர்:- ……………………………………………..
சுட்டெண்:- ……………………… நேரம் :- 2.00 மணித்தியாலம்

## பகுதி – I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
❖ மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. தாதவிழ் பூந்தாரான் என்பதில் **தார்** என்ற சொல் குறிப்பது.
1. மகரந்தம் 2. சிந்தும் 3. பூ 4. மாலை

02. அரசன் அனுப்பிய திருமுகத்திற்கு அவன் மறுமொழி அனுப்பவில்லை. இங்கு **திருமுகம்** என்பதன் ஒத்தபதம்.
1. பாடல் 2. பதில் 3. அழகிய முகம் 4. ஓலை

03. சோழ மன்னனின் புகழ் உலகெங்கும் பரவியது **புகழ்** எனும் சொல்லின் எதிர்ப்பதம்.
1. நகழ் 2. புன்னகை 3. புகழ்ச்சி 4. இகழ்

04. நாம் ஒருபோதும் இடாம்பீகமான வாழ்க்கை வாழக்கூடாது. இங்கு **இடாம்பீகம்** என்பதன் எதிர்ப்பதம்.
1. செழுமை 2. காழ்ப்பு 3. ஆடம்பரம் 4. சிக்கனம்

05. கமுகுக்கு **கூந்தல்** போல் தினைக்கு.
1. ஓலை 2. மடல் 3. இலை 4. தாள்

06. ‘Sting’ என்ற ஆங்கிலச்சொல்லின் தமிழ் வடிவம்.
1. கொடுக்கு 2. இனங்கள் 3. நெஞ்சறை 4. வயிறு

07. இருபத்தைந்தாம் அண்டின் நிறைவையொட்டிக் கொண்டாடப்படும் விழா.
1. வெள்ளி விழா 2. பவளவிழா 3. வைரவிழா 4. மணிவிழா

08. பூ, மலர், படம், புஷ்பம் என்பவற்றில் வேறுபட்ட சொல்.
1. படம் 2. பூ 3. மலர் 4. புஷ்பம்

09. தென்னையின் பிஞ்சு குரும்பை போல பனையின் பிஞ்சு.
1. நுங்கு 2. மூசு 3. வடு 4. கச்சல்

10. ‘கையைக் கடித்தல்’ என்ற மரபுத்தொடரின் பொருள்.
1. நட்டமடைதல் 2. நிர்மூலம் 3. அழிவடைதல் 4. செல்வாக்கிழத்தல்

11. மாடுகள் பட்டிக்குத் திரும்பி வந்தது. என்பதில் இடம்பெற்றுள்ள வழு.
1. மரபு வழு 2. திணை வழு 3. எண் வழு 4. பால் வழு

12. அவன் தன்னந்தனியாக வந்தான். என்பதில் **தன்னந்தனி** என்பது.
1. இணைமொழி 2. அடுக்குத்தொடர் 3. அடுக்கிடுக்குத்தொடர் 4. இரட்டைக்கிளவி

13. இராமனில் பரதன் சிறந்தவன். இங்கு **இல்** உருபு ஏற்றுள்ள வேற்றுமைப்பொருள்.
1. நீங்கல் 2. ஏது 3. ஒப்பு 4. எல்லை

14. ஒருவனின் எதிர்காலத்தை இளமையில் அறிந்துவிடலாம். என்ற பொருள் உணர்த்தும் பழமொழி.
1. தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்.
2. இளமையில் கல்வி சிலையில் எழுத்து
3. விளையும் பயிரை முளையில் தெரியும்
4. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

15. உயிர்மெய் நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை.
    1. 30    2. 247    3. 126    4. 90

16. செண்பகப் பூவின் வாசம் வானம் வரை பரவும். இதில் இடம்பெற்றுள்ள அணி.
    1. தன்மை நவிற்சியணி    2. உயர்வு நவிற்சியணி
    3. தற்குறிப்பேற்ற அணி    4. உவமை அணி

17. தனிமை, உடன்பாடு, நோயாளி, சகபாடி இதில் முன்னொட்டு இடம்பெற்றுள்ள சொல்.
    1. தனிமை    2. சகபாடி    3. உடன்பாடு    4. நோயாளி

18. செயப்படுபொருள் குன்றாவினைக்கு ஓர் உதாரணம்.
    1. சிரித்தான்    2. படித்தான்    3. நடந்தான்    4. விழுந்தான்.

19. பின்வரும் சொற்களுள் உயிர் முன் உயிர் புணர்தலுக்கு உதாரணம்
    1. வாழைப்பழம்    2. பூவிதழ்    3. மரக்கிளை    4. நிலச்சரிவு

20. நீண்ட காலம் வாழ உடலுக்கு வலிமை தரும் மருந்து என்று அழைக்கப்படுவது.
    1. காயசித்தி    2. காயகற்பம்    3. சிரஞ்சீவி    4. மூலிகை

(40 புள்ளிகள்)

## பகுதி – II

❖ முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

01. பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.

    1. மனதிற்கு இன்பமூட்டும் மாலைக் காட்சி.
    2. இயற்கையைப் பாதுகாப்போம்
    3. விடாமுயற்சி வெற்றி தரும்
    4. பழுதடைந்த கைபேசியின் சுயசரிதை.

(20 புள்ளிகள்)

02. உமது பிரதேசத்துக்கான இரவுப் போக்குவரத்துச்சேவை சீராக நடைபெறுவதில்லை. இதனால் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை விளக்கி, போக்குவரத்து சபையின் பணிப்பாளருக்கு 75 சொற்களுக்குள் அமையுமாறு ஒரு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03. சுருக்கமான விடை தருக.

    1. செவ்விகாண்பவருக்கு இருக்கவேண்டிய பண்புகள் இரண்டு தருக.
    2. வழுவமைதிக்கு இரு உதாரணங்கள் தருக.
    3. விவாதம் செய்யும்போது கவனிக்கவேண்டிய விடயங்கள் இரண்டு தருக.
    4. உயிர்முன் மெய் புணர்தலுக்கு ஒரு உதாரணம் தருக.
    5. யானை பகைவனைக் கொன்றது இதனை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(10 புள்ளிகள்)

04. பாட நூலை அடிப்படையாகக்கொண்டு விடையளிக்குக.

1. சகுந்தலையின் பெற்றோர் யாவர்?
2. நளனின் ஆட்சிச்சிறப்பு பற்றி புலவர் குறிப்பிடும் விடயம் யாது?
3. ‘தோற்றுப்பார்’ என்ற கட்டுரையின் ஆசிரியர் உலகின் எட்டாவது அதிசயமாக எதனைக் குறிப்பிடுகின்றார்?
4. ‘நகரத்தின் நிழல்’ என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?
5. ‘என் வாழ்வைக் கவலை துளிகூடத் தொட்டதில்லை’ யாரால், யாருக்கு கூறப்பட்டது?

(10 புள்ளிகள்)

05. பின்வருவன எவ்வகை வாக்கியம் எனக்குறிப்பிடுக.

1. நேற்று மழைபெய்தது.
2. எப்போது பாடசாலைக்கு வருவாய்?
3. ஐயோ! பாவம் வாயில்லாப் பிராணி
4. புத்தகத்தை எடு
5. நீ நீடுழி காலம் வாழ்க.

(10 புள்ளிகள்)

06. பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக.

1. பால் + குடம்
2. பனை + ஓலை
3. முள் + செடி
4. சதுரம் + பலகை
5. தென்னை + ஓலை

(10 புள்ளிகள்)

07. இணைக்குக.

| | |
|---|---|
| 1. விழலுக்கிறைத்தல் | மிக்க மகிழ்ச்சியடைதல் |
| 2. தலைக்கனம் | நட்டமடைதல் |
| 3. உச்சிகுளிர்தல் | வீண் செலவுசெய்தல் |
| 4. துண்டுவிழுதல் | வெளிப்படை |
| 5. கண்கூடு | தற்பெருமை |

(10 புள்ளிகள்)

ஆண்டிறுதிப்பரீட்சை – 2023
தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் - 09
விடைகள்

பகுதி – I

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | - | 4 | 6 | - | 1 | 11 | - | 3 | 16 | - | 2 |
| 2 | - | 4 | 7 | - | 1 | 12 | - | 3 | 17 | - | 2 |
| 3 | - | 4 | 8 | - | 1 | 13 | - | 3 | 18 | - | 2 |
| 4 | - | 4 | 9 | - | 1 | 14 | - | 3 | 19 | - | 2 |
| 5 | - | 4 | 10 | - | 1 | 15 | - | 3 | 20 | - | 2 |

பகுதி – II

03. 1. சிறந்த மொழி ஆளுமை, துறைசார்ந்த அறிவு
தொழிநுட்ப சாதனங்களைக் கையாளும் திறன்.

2. இவன் ஒரு பொண் - பால் வழுவமைதி.
தலையெல்லாம் வலிக்கிறது – எண் வழுவமைதி

3. தலைப்பை விளக்குதல், தகவல்களைத் திரட்டல்.

4. மரக்கிளை, வட்டப்பெட்டி, நிலச்சரிவு

5. யானையால் பாகன் கொல்லப்பட்டான்.

05. 1. செப்பு அல்லது கூற்று வாக்கியம்

2. வினாவாக்கியம்

3. வியப்பு வாக்கியம்

4. ஏவல் வாக்கியம்

5. வியங்கோள்

06. 1. பாற்குடம்

2. பனையோலை

3. முட்கெடி

4. சதுரப்பலகை

5. தென்னோலை

07. 1. விழலுக்கு.... – வீண் செலவுசெய்தல்

2. தலைக்கனம்.. – தற்பெருமை

3. உச்சி குளிர்தல் - மிக்க மகிழ்ச்சி

4. துண்டு விழுதல் - நட்டமடைதல்

5. கண்கூடு – வெளிப்படை

# LOL.lk
## BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

**ඕනෑම පොතක් ඉක්මනින්**
**නිවසටම ගෙන්වා ගන්න**






| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**